**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2023 ம் ஆண்டு ஜூலை திங்கள் 11 ஆம் நாள் செவ்வாய்கிழமை</u>

**<u>இ.ம.எண்.04/2022 இன் அ.வ.எண்.402/2017</u>**

1) பொள்ளாச்சி தாலூக்கா, தற்போது ஆனைமலை தாலூக்கா, மீனாட்சிபுரம், மூலத்தாரா, கதவு எண்.9/680–ல் வசித்து வந்த இந்து திரு.அழகிரி மகன் திரு.சின்னு (இறப்பு).

2) பொள்ளாச்சி தாலூக்கா, தற்போது ஆனைமலை தாலூக்கா, திவான்சாபுதூர் அஞ்சல், மாகாளியம்மன் கோவில் வீதி, கதவு எண்.4/9–ல் வசிக்கும் இந்து சுமார் 41 வயதுடைய லேட்.சின்னு மகன் திரு.C.ரவிக்குமார்.

... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) பொள்ளாச்சி தாலூக்கா, தற்போது ஆனைமலை தாலூக்கா, திவான்சாபுதூர் அஞ்சல், வளந்தாயமரம், களத்துச்சாளையில் வசிக்கும் இந்து சுமார் 60 வயதுடைய திரு.பழனிச்சாமி மகன் திரு.V.P.நல்லதம்பி.

2) பொள்ளாச்சி தாலூக்கா, தற்போது ஆனைமலை தாலூக்கா, திவான்சாபுதூர் அஞ்சல், வளந்தாயமரம், களத்துச்சாளையில் வசிக்கும் இந்து சுமார் 30 வயதுடைய திரு.சின்னத்துரை நாடார் மகன் திரு.கவிமுத்துராஜ்.

... எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள்

தகுதிவாய்ந்த நில அளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் அவர்களை நியமனம் செய்து மனு 1,2 அயிட்ட சொத்துக்களின் பௌதீக தன்மையை பார்வையிட்டு, நான்குபுற எல்லைகளை மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கிரைய ஆவணங்களின்படியும், வருவாய்த்துறை ஆவணங்களின் படியும் அளவீடு செய்தும் அதன் அடிப்படையில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 05.12.2022.

இம்மனுவானது கடந்த 23.06.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சுந்தரராஜ் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**இறுதி உத்தரவு**

| | |
|---|---|
| 1. | முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

**சொத்துவிபரம்**

**அயிட்டம் –1**

திருப்பூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உட்பதிவு வட்டம், முன்பு பொள்ளாச்சி வட்டம், தற்போது ஆனைமலை தாலூக்கா, மார்ச்சநாயக்கன்பாளையம் கிராமம் புலத்தில் க.ச.799B1A நெ.காலை மற்றும் பழைய க.ச.799/B2A புதிய ச.ச.799B2யA1 நெ.காலை ஆகிய இரண்டு காலைகளிலும் சேர்ந்து எனக்கு பாத்தியப்பட்ட இடத்தை திவான்சாபுதூர் பஞ்சாயத்து அலுவலகத்தால் 30.12.2003 தேதியில் MR009853 ன்படி அங்கீகரிக்கப்பட்டு மனையிடங்களாக பிரித்து விற்பனை செய்து வருவதில் 21 எண்ணுள்ள மனையிடத்தின் 1698 சதுரடி இடத்திற்கு எல்லைகளும், அளவுகளும்,

| | |
|---|---|
| 30 அடி அகல கிழமேல் பாதைகளும் | ... வடக்கு, |
| மனையிட எண்.20 க்கும் | ... தெற்கு |
| தென்டவல் பாதைக்கும் | ... கிழக்கு |
| க.ச.799B/2A2 நெ.காலைக்கும் | ... மேற்கு |

இதன்மத்தியில்

| | |
|---|---|
| கிழமேல் வடதலை அடி | ... 45 |
| கிழமேல் தென்தலை அடி | ... 41 |
| தென்வடல் மேதலை அடி | ... 31 |
| தென்வடல் கிழதலை அடி | ... 36 |
| தென்மேற்கு மூலையில் கிராஸாக | ... 6 |

இந்த அளவுள்ள 1698 சதுரடி அளவுள்ள மனையிடமும்,

பின்னும் 20 எண்ணுள்ள மனையிடத்தில் 484 சதுரடி இடத்திற்கு எல்லைகளும், அளவுகளும்,

| | |
|---|---|
| மனையிட எண்.21 க்கும் | ... வடக்கு |
| மனையிட எண்.20 ல் மீதமுள்ள 866 சதுரடி இடத்திற்கும் | ... தெற்கு |
| தென்வடல் பாதைக்கும் | ... கிழக்கு |
| க.ச.799B/2 ய A2 நெ.காலைக்கும் | ... மேற்கு |

| | |
|---|---|
| கிழமேல் வடதலை அடி | ... 45 |
| கிழமேல் தென்தலை அடி | ... 45 |
| தென்வடல் மேதலை அடி | ... 10 3/4 |
| தென்வடல் கிழதலை அடி | ... 10 3/4 |

இந்த அளவுள்ள 484 சதுரடி அளவுள்ள அனையிடமும், ஆக மொத்தம் 2182 சதுரடி இடமும், ஷை இடங்களுக்கு லே–அவுட் ரோடுகளில் நீங்களும் உங்கள் ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகனாதிகள் போகவர உண்டான வழிநடை பாத்தியம் வகையறா சகிதம். ஷை இடத்தில் கட்டிடங்கள் ஏதுமில்லை.

<u>**அயிட்டம் 2:**</u>

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உட்பதிவு மாவட்டம், முன்வு பொள்ளாச்சி வட்டம், தற்போது அனைமலை தாலூக்கா, மார்ச்சநாயக்கன்பாளையம் கிராமம் புலத்தில் க.ச.799/B1A நெ.காலை மற்றும் க.ச.799/B2A நெ.காலை தற்கால உட்பிரிவின் படி க.ச.799/B2A1 நெ.காலை ஆகிய இரண்டு காலைகளிலும் சேர்ந்து எனக்கு பாத்தியப்பட்ட பூமியை திவான்சாபுதூர் பஞ்சாயத்து அலுவலகத்தில் 30.10.2003 தேதியில் MR009853 ன்

படி அங்கீகரிக்கப்பட்டு மனையிடங்களாகப் பிரித்து விற்பனை செய்து வருவதில் மனையிட எண் 20ல் உள்ள 1350 சதுரடி இடத்திற்கு எல்லைகளும், அளவுகளும்,

| | |
|---|---|
| மனையிட எண்.21க்கும் | ... வடக்கு |
| 23 அடி அகல தென்வடல் லே-அவுட் ரோட்டிற்கும் | ... கிழக்கு |
| 799/B2A2 நெ.காலைக்கும் | ... மேற்கு |
| மனையிட எண் 19க்கும் | ... தெற்கு |

இதன் மத்தியில்

| | |
|---|---|
| கிழமேல் வடதலை அடி | ... 45 |
| கிழமேல் தென்தலை அடி | ... 45 |
| தென்வடல் மேதலை அடி | ... 30 |
| தென்வடல் கிழதலை அடி | ... 30 |

இந்த அளவுகள்ள 1350 சதுரடி அல்லது 125.48 சதுரமீட்டர் இடமும், இதன் மேல்புறமுள்ள தென்வடல் ரோட்டிலும் மற்றும் மேற்படி லே அவுட் ரோடுகளின் வழியாகவும் நீங்களும் உங்கள் வகையறாப் பேர்களும் ஆட்களும் கால்நடைகளும் வண்டி வாகனாதிகளும் போகவர உண்டான மாமூல் வழிநடை தடபாத்தியங்களும் வகையறா சகிதம்.

இவ்வுத்தரவு 2023ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 11 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

------------------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**
இ.ம.எண்.04/2022 இன் ஓ.எஸ்.402/2017
நாள்: 11.07.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

------------------------------------------